**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.39
https://ngmtamil.in/

# எட்டுத்தொகை அக இலக்கியத்தில் தமிழர் வாழ்வியல் நெறிமுறைகள்

**திருமதி ச. லீமா,**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ்த்துறை,
பெரியார் அரசு கலைக் கல்லூரி. கடலூர்-607001.
leemasargunam@gmail.com, 8056596245.
**முனைவர் ஜா. பூரணி,**
நெறியாளர், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பெரியார் அரசு கலைக் கல்லூரி, தேவணாம்பட்டினம், கடலூர்-607 001.
அண்ணமாலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**ஆய்வுச்சுருக்கம்**

எட்டுத்தொகை அக இலக்கியம் என்பது நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்பவை ஆகும். “அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது” என்பார் அறிவிற் சிறந்த ஔவையார். பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற மனிதன் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு நல்ல நெறிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். ‘எப்படியாவது வாழலாம்’ என்பதை விடுத்து ‘இப்படித்தான் வாழ வேண்டும்’ என்று மனதில் உறுதி மேற்கொண்டு செயலில் அதனை நடத்திக் காட்டுதல் வேண்டும். நில்லாமை நிலைப்பெற்றிருக்கின்ற இவ்வுலகில் நிலைப்பெற வாழ வேண்டும் என்று எண்ணியவர்கள் தம் புகழ் நிலைக்கக் கூடிய வகையில் சில சிறந்த செயல்களைச் செய்துவிட்டு மாண்டு போனார்கள். முதலாவதாக, நமக்கு வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோள்கள் இருக்க வேண்டும். உயர்ந்த குறிக்கோள்கள் மனித வாழ்க்கையின் இலக்காக அமைய வேண்டும். சங்க இலக்கியம் எனப்படுவது தமிழில் கி.மு. 200 முதல் கி.பி. 200 வரை எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்கள் ஆகும். இவ்விலக்கியம் அக்கால தமிழர்களின் வாழ்க்கை, பண்பாடு, சமூகப் பக்குவம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் காலக்கண்ணாடியாக திகழ்கின்றன. பண்டைத் தமிழரின் வரலாற்றை அறிய நமக்கு கிடைத்த கருவி சங்க இலக்கியம் ஆகும்.

**முன்னுரை**

மக்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியினரும் அவரவர் நிலைமைக்கேற்ற சில குறிக்கோள்களைக் கொண்டிருத்தல் இயல்பே. ஒவ்வொருவர் தனிவாழ்விலும் அவரவர்க்குத் தேவையான வசதிகளைச் செய்துக்கொள்ளவும், பிறருடன் கூடி வாழவும் சில நியதிகள்

அவசியமாகின்றன. வாழ்க்கையில் ஒவ்வொருவரும் உயர்ந்த கோட்பாடுகளை எண்ணுதல் முறையாகும். அப்பொழுதுதான் சில அரிய செயல்களை நமக்காகவும் சமுதாயத்திற்காகவும் ஆற்ற முடியும். தமிழரின் கலாச்சாரம் மொழி, இலக்கியம், உணவு, குடும்பங்கள், மக்கட்பேறு, விருந்தோம்பல், சடங்குகள், பல்வேறு கலைகள், அரசியல், அறம், போன்றவை தமிழரின் பண்பாட்டை, வாழ்க்கை நெறிகளை பிரிதிபலிப்பவை ஆகும்.

**திறவுச்சொல்**

அறம், விருந்தோம்பல், மக்கட்பேறு, குடும்பவிளக்கு, நட்பு, உதவி, அறம், பொருள், இன்பம், ஒழுக்கம், இல்லறம்.

**அறம் செய்யும் நெறி**

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றும் வாழ்வின் மிக முக்கியமான அடிப்படைக் குறிக்கோள் ஆகும். ஆடவர் பெண்டிரது அன்பு வாழ்க்கையை,

*"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு*
*அன்போடு புணர்ந்த ஐந்திணை"* (தொல்.களவு.1)

என்று தொல்காப்பியர் குறிப்பிடுவர். அறத்தினால் பொருளாக்கி, அப்பொருளால் இன்பம் நுகர்தல் சிறப்பாகும் என்பதைக் கருதி இன்பத்தை முதலிலும் அதற்குக் காரணமான பொருளை அதனையடுத்தும் இவ்விரண்டிற்கும் மூல காரணமான அறத்தை அதன் பின்னரும் ஆசிரியர் அமைத்திருக்கின்றார்.

பிறருக்கு உதவி செய்து வாழ்வதற்கும், தனக்கு நேரும் பகை முதலியவற்றை நீக்கி வெற்றி பெறுவதற்கும், தன் மனம் விரும்பும் காதல் இன்பதை நுகர்தலுக்கும் பொருளே ஆதாரமானது என்று பொருள் ஈட்ட செல்கிறான் தலைவன் என்பதை,

*"அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்*
*பிரிவு எண்ணிப் பொருள் வயிற் சென்ற நம் காதலர்*
*வருவர் கொல்"* (கலி.11,1-5) என்ற பாடல் வரிகள் தம்மை அருளுவான் வந்தோர்க்குப் பெறுதற்கரிய அறஞ்செய்தலில் பொருந்தி, வேண்டுவன கொடுத்தலும், பெரிதாய பகைளை எல்லாம் வென்று, செருக்கினால் அடிபணியாதாரை அழித்தலும், முற்பிறவியல் இருவர்க்கும் உண்டான பிணைப்பு இப்பிறப்பிலும் மனம் பொருந்துதல் அமைந்த புணர்ச்சியையும் தரும் என்று நமக்குக் கூறி பொருள் ஈட்ட பிரிந்து சென்றுள்ளார் தலைவன் என்று கலித்தொகை தெளிவுற உணர்த்துகின்றது. மேலும்,

*"செறுவோர் செம்மல் வாட்டலும், சேர்ந்தோர்க்கு*
*நல்இசை வலித்த நாணுடை மனத்தர்"* (அகம்.231,1-4)

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

என்ற அகநானூற்றுப் பாடல் தம் பகைவரின் செருக்கினை அழித்தலும், தம்மைச் சேர்ந்தோர்க்கு ஒரு தீங்கு நேருமிடத்து அவருக்கு உதவி செய்வதாகிய ஆண்மையும் ஆகிய இவ்விரண்டும் வீட்டில் சோம்பியிருப்பார்க்கு இல்லை என்பதை எண்ணி நாணத்தை உடைய நம் தலைவர் புகழ் கருதிக் கொடிய சுரத்தைக் கடந்து சென்றுள்ளார் என்று குறிப்பிடுகின்றது.

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றில் ஒன்றை மேற்கொள்ளாமல் செய்வன தீய செயல்களாகவே அமையும். என்பதை,

*"அரிதினின் தோன்றிய யாக்கை புரிபு தம்*
*திறம் சேரார் செய்யும் தொழில்கள் அறைந்தன்று"* (கலி.141,1-4)

என்ற பாடல் வரிகள் பெறுதற்கரிதாகத் தோன்றிய மக்கள் யாக்கையைப் பெரிதும் விரும்பி, தம் மனம் வேறுபட்டு, விரும்பிய தீ வினைகளை முற்பிறப்பில் செய்துள்ளனர் காதலோர். அறம், பொருள், இன்பம் என்று சொல்லப்பட்ட மூன்றில் அறமாகிய ஒன்றன் கூற்றைச் சாராதவர்கள் செய்யும் தொழில்களைப் பற்றி நூல்கள் சாற்றியுள்ளன. மேலும்,

"*விழையா உள்ளம் விழையும் ஆயினும்*
*அனைய பெரியோர் ஒழுக்கம்"* (அகம்.286,8-13) என்ற பாடல் வரிகள் இயல்பாகவே தீயனவற்றை விரும்பாத உள்ளமானது சிலநேரங்களில் அவற்றை விரும்பினாலும் கற்றறிந்தார் கூறக்கேட்ட நூற்பொருள்களை அங்குசமாகக் கொண்டு பொறிகளாகிய யானை ஐந்தனையும் அடக்குவர். ஒருபொழுதும் அறத்தினின்றும் வழுவார். பொருள்மீது பற்றுக் கொள்ளாது அதனால் தமக்குச் செய்துகொள்ளப்படுபவற்றை முறையாகச் செய்து கொள்வர். நன்கு ஆராய்ந்த பின்னேரே தம் தகுதிக்கு ஏற்ப செயக்கருதிய வினைகளைச் செய்து முடிப்பர். தீநெறி விலக்கி நன்நெறிச் செலுத்தும் பேரறிவுடையார்தம் ஒழுக்கம் இதுவேயாகும்.

**பெண்கள் குடும்ப விளக்காகும் நெறி**

இல்லறப் பண்புகளாக பெண்ணுக்கு அன்பு, மடன், மென்மை, ஒழுக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றனர். அவை

"*அன்பும், மடனும், சாயலும், இயல்பும்,*
*என்பு நெகிழ்க்கும்கிளவியும், பிறவும்"* (அகம்.225,1-2)

என்ற பாடல் வரிகள் அன்பும், மடப்பமும், மென்மையும், ஒழுக்கமும், எலும்பையும் நெகிழச் செய்யும் இன்சொல்லும், பிற பண்புகளும் ஒன்றுபட்டு இருக்கின்றன என்று இளங்கீரனார் கூறுகின்றார்.

பெண்ணே குடும்பத்திற்கு விளக்காக அமைபவள் ஆவாள். இவளுடைய பெருங்குணங்களே வாழ்க்கைக்குச் சிறப்பளிப்பவை ஆகும். மகளிர்க்கு உயிராக விளங்குபவர் அவர்தம் கணவன்மார் ஆவார் என்பதை,

*"ஒண்சுடர் பாண்டிற் செஞ்சுடர் போல*

***மனைக்கு விளக்கு ஆயினள் மன்ற"*** (ஐங்.405,1-2)

என்ற வரிகள் தலைவன் குடி வளர்வதற்கு ஏதுவான மகனைப் பெற்றவளாதலின் 'புதல்வன் தாய்' என்று சிறப்பிக்கப்பட்டாள் பெண். இதனாலேயே அவள் 'மனைக்கு விளக்கு' ஆயினள் என்க. பாண்டில் விளக்கின் செவ்விய சுடர் வீடுமுழுவதும் தன் ஒளியைப் பரப்பி இருளை நீக்கும். அதுபோல் குடும்ப விளக்காகிய தலைவி தன் கணவன் வீட்டின் பழி முதலிய மாசு போக்குதலின் மனைக்கு விளக்கானாள் என்பார் துரைசாமிப்பிள்ளை. மேலும், ஒளிபொருந்திய நெற்றியையுடைய, இல்லின்கண் உறையும் மகளிர்க்கு அவர்தம் கணவர் உயிர் போன்றவர் என்பதை,

***"மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"*** (குறுந்.135,2)

என்ற வரி தம் இல்லதைக் கடவாது, கற்பு நெறி நிற்கும் மனைவியர்க்குத் தனியே உயிர் என வேறாக நிற்பது ஒன்றில்லை. அவர்களைப் புரந்து, மகிழ்விக்கும் அவர்தம் கணவர் அவர்க்கு உயிரனையர் என்று குறிப்பிடுகின்றார் பெருங்கடுங்கோ.

**மக்கட்பேறு**

குடும்ப வாழ்க்கையின் சிறந்த பேறாக உள்ளது அறிவறிந்த மக்கட்பேறு. எவ்வளவு பெருஞ்செல்வம் படைத்து இன்பமாக உண்டு, உடுத்து வாழ்ந்தாலும் மக்களைப் பெறாதார் வாழ்வு சிறப்பதில்லை. படைப்பு பல படைத்துப் பலரோடு உண்ணும் பெருவாழ்வு பெற்றவராயினும், இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்து நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும் இன்புறுத்தும் மக்களைப் பெறாதார் குறைவாழ்வினராதலின் மழலைச் செல்வத்தோடு படுத்துறங்கி வாழும் வாழ்வு இன்பம் பயப்பனவாகும்.

***"புதல்வற் கவைஇயினன் தந்தை, மென் மொழிப்***
***இனதுமன்ற அவர் கிடக்கை"*** (ஐங்.409,1-3)

என்ற பாடல் வரிகள் மென்மொழிப் புதல்வன் என்றாள், குழந்தையின் கேட்டதற்கு இனிய மழலையின் பெருமை தோன்ற மக்கட்பேறு இல்லறத்தின் பயன் எனில், அம்மக்களுள்ளும் ஆண்மக்கட்பேறு நனிசறந்ததாகும். ஆண வழிச் சமூகமாதலின் ஆண்மக்கட்பேறு விழையப்பட்டது.

"***இம்மை உலகத்து இசையொடும் விளங்கி***
***வாயே ஆகுதல் வாய்த்தனம்"*** (அகம்.66,1-6)

என்ற பாடல் பகைவரும் விரும்பும் பிறரால் பழிக்கப்படாத குற்றம் தீர்ந்த அழகினையுடைய புதல்வரைப் பெற்ற தலைமைத் தன்மையுடையோர் இவ்வுலகத்தே புகழோடும் விளங்கி மறுமை உலக வாழ்வையும் குற்றமின்றி எய்துவர். இவ்வாறு சான்றோர் பலரும் கூறிய பழமொழிகள் யாவும் உண்மையாம் என்று குறிப்பிடுகின்றது.

**விருந்தோம்பலில் நெறி**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

இல்வாழ்க்கையில் வரும் விருந்தினரை ஓம்புவதும், சுற்றத்தாரை உபசரிப்பதும், இரப்பாரக்கு ஈதலும், முக்கிய அறநெறியாகும். தமிழகப் பண்பாட்டில் விருந்தோம்பல் என்பது நீண்ட பாராம்பரியத்தைக் கொண்டது. விருந்தோம்பல் என்பது உயர்ந்த பண்பாகும். சங்க காலத்தில் அதுவும் எட்டுத்தொகை நூல்களில் விருந்தோம்பல் சிறந்த கலையாகப் போற்றப்பட்டது. கணவருடன் கூடி வாழும் மங்கல மகளிருக்குரிய தனி உரிமையாக இது கருதப்பட்டது. விருந்து என்பது குடும்ப உறவோடு சமுதாய உறவையும் இணைக்க உதவும் அறநெறியாக அமைந்துள்ளது. விருந்து என்னும் சொல்லின் பொருள் புதுமை அல்லது புதியன என்பதாகும். பழங்காலத்தில் விடுதிகளோ சத்திரங்களோ இல்லை. ஆகவே, வழிப்போக்கர்கள் ஆங்காங்கே உள்ள வீடுகளின் புறத்திண்யையில் தங்குவது வழக்கம். வீட்டுக்குரியவர்கள், இரவில் வாயிற் கதவை அடைப்பதற்கு முன் யாராவது திண்ணையிலே இருக்கிறார்களா என்று அவர்களுக்கு உணவும், இரவில் தங்குவதற்கு வசதியும் அளிப்பது வழக்கம் இதனை,

**“……………………………………………………………………………………மாலைப்**

**பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்**

**வருவீர் உளீரே எனவும்”** (குறுந்.118,2-4) என்ற பாடல் வரிகள் இரவில் வீட்டின் கதவை அடைப்பதற்கு முன்பு வீட்டின் திண்ணையில் யாராவது விருந்தினர் அமர்ந்துள்ளனரா? இருப்பின் உள்ளே வரவும் என்று அழைத்து விருந்து உபசரிப்பர் என்று கூறுகின்றது. நள்ளிரவிலும் விரும்பி மேற்கொள்ளும் தமிழர் பண்பாட்டை நற்றிணை பாடல் மூலம் அறியலாம்.

***“*அல்லில் ஆயினும் விந்துவரின் உவக்கும்**

**மேல்இயற் குறுமகள் உறைவின், ஊரே*”*** (நற்.142,9-11) என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. தமிழ் மக்கள் விருந்து புறந்தரும் வாழ்வை விரும்பினர் என்பதற்குச் சங்க இலக்கியத்திலிருந்து மற்றொரு சான்று, தன் இல்லத்தில் சமைப்பதற்கு உணவுப் பொருட்கள் எதுவுமில்லை தீர்ந்துவிட்டன. யோசிக்கிறாள் தலைவி, விதை இருக்கின்றதே, உடனே செயலில் ஈடுபடுகின்றாள். உரலில் இட்டுக் குற்றினாள் அத்தினையரிசியை சமைத்து விருந்தினருக்குக் கொடுத்தாள் என்பதை,

**“…………….. மனையயோள் விரும்பி**

**வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**

**சிறது பட்டன்றோ இலளே…………………………..”**(புறம்.333,8-13) என்ற புறநானூற்று பாடல் வரிகள் மூலம் அறியலாம். மேலும், என் நல்ல மனையினிடத்தே, மிகுதியான விருந்தினர்களை நாளும் உபசரித்தலாலே கையொழியாமையினாலே பல நாளாகச் சந்திக்கப் பெற்றிலேன் என்பதனை,

**“நன்மனை நனிவிருந்து அயரும்**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**கைதூவின்மையின் எய்தாம் ஆறே"** (நற்.280,9-10) என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம். மேலும் வீட்டில் எவ்வளவு பிரச்சனைகள் இருந்தாலும் விருந்தினரைக் கண்டால் முகமலர்ந்து வரவேற்கும் சிறந்த பண்பு தமிழர்களிடம் காணப்பட்டதை,

**"எமக்கே வருகதில் விருந்தே சிவப்பாள் அன்று**

**முறுவல் கொண்ட முகம் காண்கம்மே"** (நற்.120,10-12) என்ற பாடல் வரிகள் என் வீட்டுக்கு விருந்தினர் வரவேண்டும் சினம் மாறி அவளது பற்கள் தெரிய புன்னகைச் செய்வாள் என்று தலைவன் கூறுவதன் மூலம் அவர்களின் விருந்தோம்பல் பண்பு நன்கு புலப்படுகின்றது. மேலும், இதே போன்று விருந்தோம்பல் பற்றி (கலி.32,16-19), (கலி.75,17) பாடல் வரிகளில் காணலாம்.

**நட்பு நெறி**

உயிருடன் உயிர் கலந்து ஓருயிராய் ஒன்றிய தன்மையைத்தாம் உத்தமமான நட்பு என்போம். இந்நட்பில் வெறுப்பு என்பது தலைக்காட்டுவதில்லை. இந்நட்பிற்குப் பிரிவு என்பதும் இல்லை. யாராலும் பிரிக்க முடியாத அத்தனை நெருக்கமாக அமைந்தது உயர்ந்த நட்பு.

நட்பு எமக்குக் கடலினும் பெரிது என்றது. தன்னளவிலே அதுவே உண்மையாகும். கடல் எவ்வளவு பெரியது அதற்கு எல்லையே இல்லை என்பது உண்மை. இது போல ஒருவடைய நட்பு என்பது கடலைவிட பெரியது. அதுவும் அது உண்மையான நட்பு என்பதை,

***"கடலினும் பெரிது எமக்கு அவருடைய நட்பே"*** (ஐங்.184,4)

***"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று***

***பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"*** (குறுந்.2,1-4)

***"உயிர் கலந்து ஒன்றிய தொன்றுபடு நட்பின்***

***செயிர்தீர் நெஞ்சமொடு செறிந்தோர்"*** (அகம்.205,1-2)

***"ஒன்றதும் என்ற தொன்றுபடு நட்பின் காதலர்"*** (நற்.109,1-2)

என்ற நூல்கள் உள்ள பாடல் வரிகள் மூலம் இருதலைப் புள்ளிற்கு ஓருயிர் அமைந்தாற் போன்று ஈருடல் ஓருயிராய் விளங்கும் நீர்மையராவர் நட்பினர். மேலும், பிறப்புதோறும் தொடர்ந்து வரும் ஒரு பிணைப்புமாகும். என்றும் பிரியாத பிணைப்பு மிகச் சீரியார் மாட்டே நிகழ்வது. செல்வக்காலத்து உடனிருந்து துன்பக் காலத்தில் பிரிவோர் சீரியரல்லர். என்பதை,

***"செல்வத்துள் சேர்ந்தவர் வளன் உண்டு, மற்று அவர்***

***ஒல்கத்து நல்கியா உணர்விலார் தொடர்பு போல்"*** (கலி.25,23-24)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

**நிலையாமைப் பற்றிய நெறி**

உலகமும் உலகத்துறு பொருள்களும் என்றும் மாறிக்கொண்டே இருப்பவை. ஒருவனது வாழ்நாள், அவ்வாழ்நாளில் அவனது இளமை, செல்வ வாழ்வு, உடல் எல்லாம் நிலையற்றவை.

மூப்பும் மரணமும் நேர்தல் எல்லார்க்கும் ஒத்தது ஆகும். ஒருவனுடைய ஆயுள் காலம் இவ்வளவு என்று அறுதிட்டு அறிந்தார் எவரும் இல்லை என்பதை,

***"முதிர்ந்தோர் இளமை அழிந்தும் எய்தார்***
***வாழ் நாள் வகை அளவு அறிஞரும் இல்லை"*** (நற்.314,1-2)

என்ற பாடல் வரிகள் ஒரு காலத்தே முதுமையை அடைந்தவர் மறுபடியும் அழிந்த இளமையை எய்துவது என்பது இல்லை. அதே போலத் தம் வாழ்நாளின் அளவு இன்தென்பதையும் அறிவதற்கு இல்லை என்று உணர்த்துகின்றது. கலித்தொகையும்,

***"கடைநாள் இது என்று அறிந்தோரும் இல்லை"*** (கலி.12,15)

என்று குறிப்பிடுகின்றது. மேலும் கலித்தொகை,

***"வளியினும் வரை நில்லா வாழுநாள்"*** (கலி.20,9) என்ற வரி வரையறுத்துக் கூறவியலாத நிலையாமை உடைய காற்றைப் போன்று விளங்குவது வாழ்நாள் என்று கூறுகின்றது.

***"………………….. ………………………………… நாளும்***
***இந்நிலை அறியாய்"*** (அகம்.353,2-6)

என்ற வரிகள் இளமையும் வாழ்நாளும் ஓடிப்போதலும், மூப்பும் மரணமும் கிட்டி வருவதும் ஒரு கனவு நிகழ்ச்சி போன்று வேகமாக மாறி போகும் என்று வலியுறுத்துகின்றது.

**முடிவுரை**

பண்டைத் தமிழர்களின் வாழ்க்கை வரலாற்று நெறிகளை அறிய நமக்கு இன்று கிடைத்துள்ள சிறந்த கருவி சங்க இலக்கியங்களே ஆகும். அவற்றில் எட்டுத்தொகை அக இலக்கியத்தை மட்டும் இவ்வாய்வு கட்டுரைக்கு எடுத்துக்கொண்டு அவற்றில் மக்களில் அறவாழ்க்கைக்குரிய நல்ல நெறிகளைப் பேண வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றது. அறம், பொருள், இன்பம் என்னும் இலட்சியங்களும் அவற்றை அடைவதற்குரிய வழிகளும் காட்டப்பட்டுள்ளன. மனை வாழ்க்கை, விருந்தோம்பல், மக்கட்பேறு, நட்பு, நிலையாமை ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள சில நெறிகளை மட்டும் இக்கட்டுரையில் விளக்கியுள்ளேன்.

**துணைநூற்பட்டியல்:**

[1.] சங்கத் தமிழர் வாழ்வியல், மு. சண்முகப் பிள்ளை, உலகத்
[2.] தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, 600 113. முதற் பதிப்பு-1997.
[3.] முனைவர் வி. நாகராசன், (உரை) குறுந்தொகை மூலமும் உரையும், நியு
[4.] செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, ஆறாம் பதிப்பு-2017.
[5.] முனைவர் அ. தட்சாணாமூர்த்தி, (உரை) ஐங்குறுநூறு மூலமும் உரையும்,
[6.] நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, ஆறாம் பதிப்பு-2017.
[7.] முனைவர்.கு.வெ. பாலசுப்பிரமணியன், (உரை) நற்றிணை மூலமும்

[8.] உரையும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை,

[9.] ஆறாம் பதிப்பு-2017.

[10.] முனைவர். இரா. செயபால், (உரை) அகநானூறு மூலமும் உரையும், நியு

[11.] செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை,ஆறாம் பதிப்பு- 2017.

[12.] முனைவர்.அ.விசுவநாதன்,(உரை) கலித்தொகை மூலமும் உரையும், நியு

[13.] செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, ஆறாம் பதிப்பு-2017.